1970 மார்ச் 24]

யினுடைய கண்காணிப்பு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் போலீஸ் "வான்"களில் அடிக்கடி குடிசைப் பகுதி களுக்குச் சென்று பிரசாரம் செய்து வருகிறார்கள். எச்சரிக்கை யாக இருக்குமாறு கேட்டுக்கொண்டு வருகிறார்கள். இப்பொழுது கட்டப்பட்டு வருகின்ற இந்தத் தீப் பிடிக்காத வீடுகளின் எண்ணிக்கை இன்னும் விரைவிலே அதிகமாகக் கூடும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, முதலமைச்சரவர் கள் சொல்லுகிறபோது, சுமார் 12 இலட்ச ரூபாய் இந்தத் தீ விபத்துக்களின் காரணமாக நஷ்டம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால், கொடுத்திருக்கும் நிவாரணமோ மிகக் குறைவு. தீ விபத்து, மனிதனுடைய வாழ்வையே நாசப்படுத்துவதால், இதற்கென்று ஸ்பெஷல் நிதி ஏற்படுத்தி, மத்திய சர்க்காரிடம் ஒரு பகுதி, மாநில சர்க்காரிடம் ஒரு பகுதி, பொதுமக்கள் நன்கொடை மூலம் ஒரு பகுதி என்று வசூலித்து, இப்படி ஓரளவுக்கு நிவாரண நிதியை உயர்த்தி, நிவாரணத்தையும் உயர்த்த அரசு முன்முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உடை மானியமாக பத்து ரூபாயும், வீடுகளுக்காக முப்பது ரூபாயும் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த அரசு உடை மானியமாக இருபது ரூபாய், வீடு களுக்காக 60 ரூபாய் என்ற அளவில் அந்த உதவியை உயர்த்தியிருக் கிறது. வேறுபல உதவிகளைச் செய்வதற்கும், மாண்புமிகு உறுப்பி னர் எடுத்துச்சொன்ன யோசனையைப் பரிசீலிக்கவும் இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, சென்னை நகரில் மட்டும் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கும் நிலைமையை அரசு உருவாக்கியிருக்கிறது. அதே மாதிரி, கிராமங்களிலும் மற்ற பகுதிகளிலும் அப்படிப்பட்ட தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஏதாவது முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கிராமங்களில் தீ விபத்து ஏற்பட்டாலும், எப்படிச் சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக உதவிகள் செய்யப்படுகின்றனவோ அதைப்போலவே அங்கும் உதவிகள் செய்யப்படுகின்றன. ஆனால், சென்னையில் இருக்கின்ற அளவுக்கு அவ்வளவு அதிகமான குடிசைகள் கிராமங் களில் இல்லை.

Constitution of Police Commission.

*510 Q.—Dr. H. V. HANDE:
Thiru V. SWAMINATHAN:
Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: } Will
Thiru K. VINAYAKAM:
Thiru S. DURAISWAMY:

the Hon. the Chief Minister be pleased to state:—

(a) whether the Government have appointed a Commission to study the working and conditions of service of the Police Force in the State; and

(b) the terms of reference of the Commission?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப் பட்டுள்ளது.

திரு. கே. விநயகம்: இந்தக் குழுவினுடைய சிபார்சுகளை அமல்படுத்துவதற்கு அரசுக்கு என்ன பொருட்செலவாகும் என்று மதிப்பிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இன்னும் திருமணமே ஆக வில்லை!

திரு. சு. துரைசாமி: அந்தக் குழுவின் பரிசீலனை முடிந்து அறிக்கை அளிக்க எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: விரைவில் அவர்களிட மிருந்து அந்த அறிக்கையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: இந்தக் காவல் துறை சம்பந்தப்பட்ட வரையில், இதைப் பரிசிலனை செய்வதற்காக வேண்டி ஏற்படுத்தியிருக்கக்கூடிய மிக முக்கியமானது; அதற்காக எவ்வளவு செலவானாலும் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய தில்லை. ஆனால், அதே நேரத்தில் இந்த முக்கியமான குழுவில் அரசி யல் கட்சியைச் சார்ந்த தலைவர்களையும் சேர்த்துப் பிரச்சினைகளைப் பரிசீலனை செய்வதன் மூலமாகச் சரியான முடிவுக்கு வர முடியும் என்பதை முதலமைச்சரவர்கள் உணருகிறார்களா? அப்படியானால், அந்த அடிப்படையில் ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதை இந்த அரசு உணர்ந்து தான், பிரச்சினைக்குரியவரல்லாத ஒரு அரசியல் தலைவரை இதிலே உறுப்பினராக ஆக்கியிருக்கிறோம்.

THIRU T. MARTIN: Mr. Speaker, may I request the Hon. Chief Minister to state whether any interim report has been submitted by this Commission, or whether they have informed the Government that they would submit an interim report to the Government or whether any time-limit has been fixed by the Government for the submission of the report to the Government?

மாண்ண்புமிகு திரு. மு.க கருணாநிதி: மூன்றும் இல்லை.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, போலீசாருடைய வேலைமுறைகளைப்பற்றி நம்முடைய நாட்டின் ஜனாதிபதி அவர் களும், உள்நாட்டு அமைச்சர் திரு சவான் அவர்களும், போலீ சாருடைய நிலைமைகளில் மாறுதல் தேவை என்று பலவாறாக வற் புறுத்தி வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய காவல் துறையினருடைய நிலைமை குறித்து ஆராய குழு அமைத்திருப்பது

பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1970 மார்ச் 24]

மிகவும் வரவேற்கத்தகுந்ததே. அந்தக் குழுவின் அறிக்கையின் மீது அரசு முடிவு எடுப்பதற்கு முன், அதனை இந்த மன்றத்தில் வைத்து விவாதிக்க முதலமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்றத்திலே விவாதிப்பது கூட, பிறகு இருக்கலாம். ஆனால் அதிலே வேதனையான சம்பவம் ஒன்று என்னவென்றால், இந்தக் குழுவின் வினாத்தாள்கள், தமிழகத்தில் உள்ள எல்லா சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், டிஸ்ட்ரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி 1,700 பேர்களுக்கு வினாத்தாள்கள் அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் திருப்பியனுப்புவதற்குக் கடைசி நாள் 31—3—1970 ஆகும். இன்னும் ஏழெட்டு நாட்கள்தான் இருக்கின்றன. வந்திருக்கிற பதில்கள் நான்கு பேர்களிடமிருந்து தான்.

திரு. கே. விநாயகம் : உலகத்திலேயே போலீஸ் துறையிலே நல்ல பணி செய்பவர்கள் என்று பிரசித்திபெற்றது லண்டன் போலீஸ் தான் என்று சொல்லப்படுகிறது. இந்தக் குழுவை இங்கிலாந்து நாட்டுக்கு அனுப்பி, அங்கு எப்படி நடக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்து, அது நம்முடைய நாட்டுக்குப் பொருந்துமா என்பதை விசாரித்து, பிறகு அறிக்கையை நமக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று இப்போதாயினும் அவர்களுக்குத் தாக்கீது அனுப்புவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உலகத்திலேயே தமிழ் நாட்டுக் காவல் துறை தான் சிறந்த காவல் துறை என்று சொல்லப்படுகிறது. (திரு. கே. விநாயகம் : இந்தியாவில்) இந்தியாவில் என்று சொல்கிறார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டிலிருக்கிற காவல் துறை மீது நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பார் என்று கருதுகிறேன். அந்தக் குழுவின் அறிக்கை விரைவில் வரவேண்டும் என்று எல்லோரும் கருதுகிறபோது, என்ன காரணத்தினாலோ— மறைமுகமாக—தாமதமாக வேண்டும் என்று யோசனை சொல்லுகிறார்.

திருப்பூர் நகரில் கூடுதல் காவல் நிலையங்கள்

* 511 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் காவலர் நிலைய எண்ணிக்கையை அதிகரிப்பது சம்பந்தமாக திருப்பூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரிடமிருந்து 21—3—1968-ல் விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?